
மாணவர்களுக்கு - வகுப்பில் எவ்வாறு இணைவது ?

Contents

1. பதிவு செய்தலும் உள் நுழைதலும் (Register & Login)....2
2. எனது விபரம் (My Profile)....3
3. வகுப்புகளை தேடுதல்....4
4. வகுப்பு பற்றிய தகவல்களைப் பார்வையிட....5
5. வகுப்பில் பதிவு செய்தல்....6
   5.1 நேரடியாக பணம் செலுத்துதல் (Pay by Cash)....8
   5.2 இணையத்தளம் மூலம் பணம் செலுட்துதல்(Pay by Card)....9
6. பதிவு செய்யப்பட்ட வகுப்பில் இணைவது எவ்வாறு?....9

1. பதிவு செய்தலும் உள் நுழைதலும் (Register & Login)


1. 'Register' ஐ தெரிவு செய்யவும்
2. உங்கள் தகவல்களை கொடுத்து பதிவு செய்யவும்
3. உங்கள் மின்னஞ்சல் முகவரியை உறுதிப்படுத்திக்கொள்ளவும். தவறான மின்னஞ்சல் முகவரியெனின் உங்களால் தளத்தில் உள்நுழைய முடியாது.
4. நீங்கள் பதிவு செய்தவுடன், தளத்தில் நீங்கள் கொடுத்த மின்னஞ்சல் முகவரிக்கு, மின்னஞ்சல் ஒன்று கிடைக்கும்.
5. அதில் 'Confirm Account' என்பதை அழுத்தி உங்கள் மின்னஞ்சலை உறுதி செய்யவும்.




6. 'Confirm Account' ஐ அழுத்தியதும், நீங்கள் 'Login' (உள்நுழை) பக்கத்துக்கு செல்வீர்கள்
7. அதில் உங்கள் மின்னஞ்சல் முகவரியையும் கடவுச்சொல்லையும் கொடுத்து உள்நுழையலாம்.

2. எனது விபரம் (My Profile)

1. உங்கள் தகவல்களை 'My Profile' இல் பார்க்கலாம்.



2. உங்கள் தகவல்களை நீங்கள் 'Edit' மூலம் மாற்றிக்கொள்ள முடியும். கீழுள்ள படத்தில் சிவப்பு கட்டங்களில் காட்டப்பட்டவைகளை அவதானிக்கவும்.




3. மேலே படத்தில் காட்டப்பட்டவாறு உங்கள் கடவுச்சொல்லை மாற்ற முடியும்.

4. நீங்கள் வகுப்பொன்றிற்கு பதிவு செய்திருந்தால் 'My Upcoming Classes' இல் அந்த தகவல்களைப் பார்க்கலாம்.

5. நீங்கள் பதிவு பண்ணி கலந்து கொண்ட பழைய வகுப்பு தகவல்களை 'My Past Classes' இல் பார்க்கலாம்.


3. வகுப்புகளை தேடுதல்

1. எதிர்வரும் வகுப்பு விபரங்களை 'Online Classes' பிரிவில் பார்க்கலாம் - https://www.learneasy.lk/online-sessions
2. உங்கள் வகுப்புகளை தரம் (Grade), பாடம் (Subject) அல்லது ஆசிரியரின் பெயர் ஆகியவற்றின் மூலம் தேடலாம். கீழுள்ள படத்தில் உதாரணம் காட்டப்பட்டுள்ளது.




4. வகுப்பு பற்றிய தகவல்களைப் பார்வையிட

1. வகுப்பு பற்றிய மேலதிக விபரங்களை அறிய 'View Details' ஐ அழுத்தவும். இலவச வகுப்புக்கள் கீழுள்ள படத்தில் காட்டியவாறு குறிப்பிடப்பட்டிருக்கும். வகுப்பு நடாத்தப்படும் மொழியும் கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டிருக்கும்.




2. வகுப்பு பற்றிய மேலதிக தகவல் பக்கத்தில் ஆசிரியரின் தகவல்கள், வகுப்பு பற்றிய தகவல்கள், இனி வரும் வகுப்புகள் பற்றிய தகவல்களைப் பார்க்கலாம்.




3. ஆசிரியரின் தகவல்களை, மேற்குறிப்பிட்டவாறு ஆசிரியரின் பெயரை அழுத்தி பார்க்கலாம்.
4. வகுப்பு நிகழவிருக்கும் திகதி, நேரம் ஆகியவற்றையும் இப்பக்கத்தில் காணலாம்.
5. நீங்கள் இந்த வகுப்பில் இணைய விரும்பினால் மேற்குறிப்பிட்டவாறு 'Register' செய்ய வேண்டும்.

5. வகுப்பில் பதிவு செய்தல்


1. வகுப்பில் பதிவு செய்ய 'Register for this class' ஐ அழுத்தவும்.



2. ‘Register for this Class’ ஐ அழுத்தியதும் பின்வரும் திரை தோன்றும்.




3. நீங்கள் பதிவு பண்ணுவது இலவச வகுப்பாயின், நீங்கள் மேற்குறிப்பிட்ட படத்திலுள்ளவாறு ‘Ragister’ ஐ அழுத்த வேண்டும்.
4. நீங்கள் பதிவு செய்வது கட்டணம் செலுத்தப்படவேண்டிய வகுப்பாயின், பின்வருவனவற்றில் ஒன்றை தெரிவு செய்யவும்.
   ‘Pay by Cash’ or ‘Pay Online’




5.1 நேரடியாக பணம் செலுத்துதல் (Pay by Cash)

1. நீங்கள் 'Pay By Cash' ஐ தெரிவு செய்தால், நீங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்தி, உங்கள் பணவைப்பு சீட்டை புகைப்படம் மூலம் (076) 667 4945 இற்கு WhatsApp செய்யவும்.
2. உங்கள் பணவரவு சரிபார்க்கும் வரை குறிப்பிட்ட வகுப்பில் உங்கள் நிலை 'Pending Payment' ஆக இருக்கும்.



3. உங்கள் பணவரவு உறுதிப்படுத்தப்பட்டவுடன் குறிப்பிட்ட வகுப்பில் நீங்கள் பதிவி செய்யப்படுவீர்கள். கீழுள்ள படத்தில் காட்டப்பட்டவாறு உங்கள் நிலை 'Registered' ஆக மாறும்.




5.2 இணையத்தளம் மூலம் பணம் செலுட்துதல் (Pay by Card)


1. நீங்கள் 'Pay Online' ஐ தெரிவு செய்திருந்தால், உங்கள் வங்கி அட்டை மூலம் நீங்கள் பணத்தை செலுத்தலாம்,
2. பணம் செலுத்தப்பட்டவுடன், உங்களுக்கு உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்படும். நீங்கள் உடனடியாக வகுப்பிற்கு பதிவு செய்யப்படுவீர்கள்.
3. இணையத்தில் கட்டணம் செலுத்தும்போது ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் பின்வரும் மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். learneasy.lk@gmail .com அல்லது (076) 667 4945

6. பதிவு செய்யப்பட்ட வகுப்பில் இணைவது எவ்வாறு?

1. நீங்கள் ஒரு வகுப்பில் இணைய பதிவு செய்தவுடன், உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் கிடைக்கும்.
2. நீங்கள் பதிவு செய்த எல்லா வகுப்பு விபரங்களும் 'My Profile' -> 'My Upcoming Classes' இல் பார்க்கலாம்.
3. நீங்கள் குறிப்பிட்ட ஒரு பாடத்துக்கான மாதாந்த வகுப்பில் இணைந்தால், ஒரு மாதத்தில் நடாத்தப்படும் எல்லா வகுப்புக்களிலும் கலந்து கொள்ள முடியும். உதாரணமாக, தரம் 10 க்கான கணித வகுப்பொன்றில் 25 ஆம் திகதி ஜூலை மாதம் பதிவு செய்தால், குறிப்பிட்ட ஆசிரியரின் தரம் 10 க்கா ஆகஸ்ட் 25 வரை நடக்கும் எல்லா வகுப்புகளிலும் நீங்கள் கலந்து கொள்ளலாம்.
4. நீங்கள் பதிவு செய்த வகுப்பிற்கான பயிற்சி தாள்கள் அல்லது கடந்தகால வினாத்தாள்கள் ஆசிரியரால் தரப்பட்டிருப்பின், அவை படத்தில் காட்டப்பட்டவாறு 'Download Materials' இல் கிடைக்கும். இந்த தகவல் பதிவு செய்த மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.




5. வகுப்பு ஆரம்பமாகும் நேரத்தில் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டவாறு 'Registered' என்னும் சொல் 'Join Now' என்பதாக மாறும். இவ்வாறு மாறவில்லையெனின், உங்கள் இணையப்பக்கத்தை Refresh செய்யவும்.



6. 'Join Now' ஐ தெரிவு செய்தால் கீழே குறிப்பிடப்பட்ட பக்கம் தோன்றும். அங்கே நீங்கள் எமது இணையத்தில் பதிந்த உங்கள் பெயரைக் குறிப்பிட்டு, 'I'm not a robot' என்பதை தெரிவு செய்யவும். அதன் பின், சில படங்கள் தோன்றும்.

அதில் கேட்கப்படும் படங்களை தேர்வு செய்தால், நீங்கள் வகுப்பில் உள்நுழையலாம்.



7. உங்கள் ஆசிரியர் உங்களை வகுப்பில் அனுமதிக்கும்வரை காத்திருக்கவும்.
8. வகுப்பில் இணைவதில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால் பின்வரும் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும் - (076) 667 4945